ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
අති විශෙෂ அதி விசேஷமானது
අංක 2287/34 – 2022 ජූලි මස 07 වැනි බ්‍රහස්පතින්දා – 2022.07.07
*2287/34 ஆம் இல.கம் - 2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 07 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

*38 ஆம் பிரிவு (அ) வின் கீழான கட்டளை*

***2022 ஆம் ஆண்டின் 108 ஆம் இலக்கக் கட்டளை***

எனது குறிப்பு இல. : *4-3/3/2019/* FR/*202.*
பிரதேச செயலாளர் குறிப்பு இல : KOT/LND/ACQVI/01/*81.*

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவு (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் நாலக்க ஜூட் ஹரின் பெர்னாண்டோ ஆகிய நான், இங்கு கீழ்க் காணும் அட்டவணயின் 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத்தர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதறகு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஹரின் பெர்னாண்டோ,
சுற்றுலாத்துறை மற்றும் காணி,
அமைச்சர்.

சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல.*200/6*, இரஜமல்வத்தை வீதி,
*2022*, யுன் *03*.

***அட்டவணை***

***1. காணி எடுத்தல் உத்தியோகத்தர்*** : பிரதேச செயலாளர், கொட்டபொல.

***2. காணியின் விபரம்*** : தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், கொட்டபொல பிரதேச செயலாளர் பிரிவில், இல *241*H, கந்தில்பான கிராம அலுவலர் பிரிவில், கிரிவெல்தொல கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2020.09.07 ஆந் திகதிய இ.கி.வ.125 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் விபரமாக காட்டப்பட்ட பெயர் மற்றும் விஸ்தீரணத்தைக் கொண்ட காணித் துண்டுகளின் எல்லைகள்.

*01.* **துண்டு இல. *86* – மானிக்கவத்தை – விஸ்தீரணம்: *11.4960* ஹெக்டயார்**

வடக்கு: சப்பிரகமுவ மாகாணம் மற்றும் துண்டு இல. *48*; கிழக்கு: துண்டு இல. *1* மற்றும் *48*; தெற்கு: கா.அ.ஆ வ. *23* இல் துண்டு இல. *73*; மேற்கு: சப்பிரகமுவ மாகாணம் மற்றும் துண்டு இல. *48*.

EGO 07-0045